
# வேத மாணவர்கள்




## பாஸ்டர் ரசல், வேதமாணவர்களை உருவாக்கினார் யெகோவாவின் சாட்சிகளை அல்ல

# வேத மாணவர்கள்

## பாஸ்டர் ரசல் வேத மாணவர்களை உருவாக்கினார் யெகோவாவின் சாட்சிகளை அல்ல

### *கிபி 1931ல் ஜட்ஜ் ரூதர்போர்டு என்பவர் "யெகோவாவின் சாட்சிகள்1' என்ற இயக்கத்தை உருவாக்கினார்.*

*பாஸ்டர் ரசல் காலத்தில் இருந்த 75 சதவிகிதத்திற்கும் மேலான வேதமாணவர்கள் கி.பி.1931ல் ஜட்ஜ் ரூதர்போர்டு ஐக்கியத்தில் இருந்து வெளியேறி இருந்தார்கள். ஆகவே, ரூதர்போர்டு ஐக்கியத்தில் இருந்தவர்கள், ரசலை சேர்ந்தவர்கள் என்றோ, வேதமாணவர்கள் என்றோ அதன்பிறகு அழைக்கப்படவில்லை. அவர்கள் தங்களை யெகோவாவின் சாட்சிகள் என்று அழைத்துக் கொள்ள ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினார்கள். (பக்கம் 5)*

அட்டையில் காணப்படுகிற இரண்டு அடையாள சின்னங்கள், பாஸ்டர் ரசலின் சேதமாணவர்களை அடையாளப்படுத்துகிறதாக இருக்கிறது.

1. ஆரம்ப காலத்தில் சுமார் கி.பி.1872ல் இருந்து ரசல் உண்டாக்கின சிலுவையும், கிரீடமும் அதனை சுற்றி அலங்கரிக்கப்பட்ட மலர் வளையமும் கொண்ட சின்னத்தை இன்றையவரைக்கும் வேத மாணவர்கள் தங்கள் பிரசுரங்களில் பயன்படுத்தி வருகின்றனர். இந்த அடையாள சின்னங்கள் (கிறிஸ்துவோடு) அனுதின சிலுவை சுமக்கும் அனுபவங்களையும்அதன்பின்பாக கிடைக்கக்கூடிய ஜீவகிரீடத்தையுமே அடையாளப்படுத்துகிறது. மேலும் கிறிஸ்துவோடு அவருடைய ராஜ்யத்தில் பங்குபெற்று, மனுக்குலத்திற்கு நித்திய வாழ்வை தர முடியும் என்பதை வாடாத மலர் வளையம் உணர்த்துகிறதாயிருக்கிறது.

யெகோவாவின் சாட்சிகள், கிறிஸ்து ஒரு சிலுவையில் மரித்தார் என்பதை விசுவாசியாமல் நேராக இருக்கும் ஒரு கழுமரத்தில் மரித்தார் என்று நம்புகின்றனர். மேலும், அநேக யெகோவாவின் சாட்சிகள், இந்த சிலுவையையும் கிரீடத்தையும் விக்கிரக ஆராதனை என்றும் கூறி வருகின்றனர். இதுவே அவர்கள், பாஸ்டர் ரசலின் வேதமாணவர்களாக இருக்க தகுதியற்றவர்கள் என்பதை நிரூக்கிறது.

2. ஆயிரம் வருட அரசாட்சியில் செம்மறி ஆடகளை கூட்டி சேர்ப்பதை அல்ல, கோதுமை மணிகளை களஞ்சியத்தில் சேர்க்கிறதே, வேதமாணவர்களின் குறிக்கோளாக இருக்கிறது. மத்தேஹ 13ல் கோதுமை என்பது உலகளாவிய வேதாகம சத்திய ஊழியத்தால் ஆவியால் ஜெநிப்பிக்கப்பட்ட கிறிஸ்தவர்களை அடையாளப்படுத்துகிறது.

**Copyright** :**Kenneth Rawson**
**kwrpeace@optonline.net**
**or**
**Bible Students**
**P.O.Box ; 331, Iseline, NJ 08830, USA.**

**Translated by** : **Chennai Bible Students**
**No-22, Rajiv Nagar,1st Street,**
**Kaladipet, Thiruvottriyur,**
**Chennai, - 600 019, India.**

**Digital Media** : **Y.Victor Gnanaraj**
**Coimbatore Bible Students**
**email - victorgnanaraj01@gmail.com**

# முன்னுரை

பாஸ்டர் ரசலின் வேதமாணவர்கள் என்ற வார்த்தை இந்த புத்தகத்தில் அடிக்கடி சொல்லப்பட்டுள்ளது. ஏனெனில், வாட்ச் டவர் விசுவாசிகளிடம் இருந்து அவர்களை வேறுபடுத்திக் காட்டுவதற்காகவே ஆகும். இந்த வேதமாணவர்கள் பாஸ்டர் ரசல் அவர்களை சத்தியத்தை போதிக்க தேவனால் பயன்படுத்தப்பட்டவர் என்று இந்த கடைசி காலங்களில் உயர்வாக கருதுகின்றனர். ஆயினும் இவர்கள், வாட்ச் டவரில் சொல்லப்படுவதை அப்படியே விசுவாசிக்கும் யெகோவாவின் சாட்சிகளை போல் கண்மூடித்தனமாக எதையும் விசுவாசிப்பதில்லை. பாஸ்டர் ரசலின் வேதமாணவர்கள், ஒவ்வொரு காரியத்தையும் வேத வசனத்தோடு ஒப்பிட்டுப்பார்த்து, வேதாகமத்தோடு இசைத்திருக்கிறதா என ஆராய்ந்த பிறகே ஏற்றுக் கொள்கின்றனர்.

யெகோவாவின் சாட்சிகளை குறித்த இணைய தளத்தின் குறிப்புகளில், ஜட்ஜ் ரூதர்போர்டின் தலைமை பொறுப்புகளையும் அவருடைய வளர்ச்சியின் பெருமையைப் பற்றியும் அதிகமான தகவல்கள் காணப்படுகின்றன. மேலும், அதில் பாஸ்டர் ரசலுக்கும் யெகோவாவின் சாட்சிகளுக்கும் எந்தவித தொடர்பும் இருந்ததாக காணப்படவில்லை.

மேலும் ஆயிரக்கணக்கான யெகோவாவின் சாட்சிகள் மற்றும் முன் னாள் யெகோவாவின் சாட்சிகள் யாவரும், வாட்ச் டவரின் தற்போதைய வழிநடத்துதலில் அதிருப்தியடைந்து பலர் மன அழுத்தத்திற்கு உள்ளாகி இருக்கிறார்கள்.

என்னுடைய பெற்றோர்கள் இருவருமே ஜட்ஜ் ரூதர்போர்டு தலைமைக்கு முன்னதாகவே வேதமாணவர்களாக இருந்தவர்கள். என்னுடைய சிறுவயதில் என்னுடைய பெற்றோர்களோடு மற்ற வேதமாணவர்களும் இணைந்து ஜட்ஜ் ரூதர்போர்டு தலைமை ஏற்பதை பற்றியும் அதற்காக தூண்டுகிற வழிமுறை பற்றியும் விவாதம் பண்ணிக் கொண்டிருந்தது என் நினைவில் இருக்கிறது.

மேலும் கிபி 1940லிருந்து கிபி 1960வரை, வேதமாணவர்களுடனான என்னுடைய உறவில் பாஸ்டர் ரசலோடு நெருங்கி இருந்தவர்களோடு

*நான் விவாதிக்க முடிந்தது. இதனை என் வாழ்க்கையில் விலைமதிப்பற்ற ஒன்றாக கருதுகிறேன்.*

*கி.பி.1926ல் ஜட்ஜ் ரூதர்போர்டு, தம்முடைய குணலட்சணங்களில் வளர்ச்சி அடைய வேண்டும் (கலாத்தியர் 5 18 25 மற்றும் 2 பேதுரு1 4 11) என்ற அடிப்படை போதனையை தகர்த்து எறிந்தார் என, பாஸ்டர் ரசல் ஐக்கியத்தில் இருந்தவர்கள் மூலம் அறிந்திருந்தேன், நாம் சுபாவ மனிதர்கள், நாம் நம்மை மாற்றிக் கொள்ள இயலாது என கூறினார். இந்த காரியம் தான் முதன்முதலில் வேதமாணவர்கள் வாட்ச்டவரிலிருந்து வெறியேற காரணமாயிருந்தது. ஏன்?*

*பாஸ்டர் ரசலின் வேதமாணவர்கள், நம்முடை சுபாவ குணங்களில் வளர்ச்சி அடைய வேண்டும் என்ற போதனையில் வாஞ்சையாயிருந்தார்கள், மேலும் 1,44,000 பேர் கிறிஸ்துவோடு அவருடைய ராஜ்யத்தில் (1 பேதுரு 2 9 ) அன்பில் விருத்தியடைந்து பூமியின் மனுக்குலத்தை சத்தியத்தால் போஷித்து நியாயத்தீர்ப்பவர்களாகவும் இருப்பார்கள் என்று விசுவாசிக்கின்றனர். இப்படிப்பட்ட ஆசீர்வாதமான வேலையை செய்வதற்கு, முதலாவது தங்களை முழுவதும் பிதாவிற்கு ஒப்பான குணநலன்களில் வளர்த்துக் கொள்ள வேண்டும். (2 கொரி. 3 18)*

*இப்படிப்பட்ட புத்தகங்களை கிபி 1950 , கிபி 1970 மற்றும் கிபி 1990களில் ஆசிரியர் வெளியிட்டார், ஆனால் இப்போது இது முன்பைவிட அதிகமாக தேவைப்படுகிறது. ஆகவே இந்த செய்தி, தேவனுடைய கிபையோடும் ஜெபத்தோடும், வேதாகம கண்ணோட்டத்தோடும் கொடுக்கப்படுகிறது. இது தேவனை நேசிக்கிறவர்களுக்கு மிகவும் உபயோகமான ஒன்றாக இருக்கும்.*

கென்னத் W. ராசன்

## சரித்திரக் குறிப்பு

*பாஸ்டர் ரசலின் மரணம் மட்டும், வாட்ச் டவர் என இரண்டு வார்தைகளில் அலுவலகம் மற்றும் பத்திரிக்கைகளில் வெளிவந்தது. ஆனால் கி.பி 1931ல் வாட்ச்டவர் என்று ஒரே வார்த்தையாக மாற்றப்பட்டது.*

*பாஸ்டர் ரசல் வேத மாணவர்களை உருவாக்கினார் யெகோவாவின் சாட்சிகளை அல்ல*

## உள்ளடக்கம்

*1. யெகோவாவின் சாட்சிகள், பாஸ்டர் ரசலின் வேதமாணவர்கள் அல்ல எப்படி? ஏன்? யெகோவாவின் சாட்சிகள் உருவாயினர் யெகோவாவின் சாட்சிகள் இயக்கம் கிபி1931ல் உருவாக்கப்பட்டது.*

*2. வேதமாணவர்களுக்கு என்ன நேர்ந்தது ? ஜட்ஜ் ரூதர்போர்டு மற்றும் அவரது புதிய இயக்கம் சரித்திர பின்னணி*

*3. மாற்று உபதேசங்களும், யூத விரோத கொள்கையும் ரூதர்போர்டும் யூத விரோத கொள்கையும் ரூதர்போர்டு, ஜெர்மனியில் ஹிட்லரிடம் நற்பெயரை அடைவதில் தோல்விஅமைந்தார் தற்பெருமையின் போட்டி ஒரு களங்கத்திற்குரிய மாறுபாடு*

*4. வேதமாணவர்களின் வரலாற்று சிறப்புமிக்க போதனைகளை யெகோவாவின் சாட்சிகள் நம்புவது இல்லை சபைகளின் சுயஆட்சி எல்லோருக்கும் இரட்சிப்பு சுவிசேஷத்தின் முக்கியத்துவம் வேதத்தில் சொல்லப்பட்ட யெகோவாவின் சாட்சிகள் யார் ?*

*5. ஒரு கலப்பின முயற்சி*

*.இறுதி குறிப்பு*

# 1915
# ரூதர்போர்டு நீக்கப்பட்டார்

பாஸ்டர் ரசலுக்கு மிகவும் உண்மையான சகோதரர் று.ஹ.பேக்கர் என்பவர் கிபி 1915ல் ஜட்ஜ் ரூதர்போர்ட்டை பாஸ்டர் ரசல் பதவி நீக்கம் செய்திருந்தார் என என்னிடத்தில் தனிப்பட்ட முறையில் கூறி இருந்தார். சகோதரி கோரா சன்பாம் என்பவரும் பெத்தேலில் முக்கிய உறுப்பினரான அவருடைய தந்தை சகோதரர் ஜான் குயின் என்பவரும் கூட, ரூதர்போர்டு கி.பி.1915ல் பதவி நீக்கப்பட்டார் என்று கூறியிருக்கின்றனர்.

அதன்பிறகு பாஸ்டர் ரசலின் காலப்பகுதியில், ரூதர்போர்டு ஒரு போதும் வாட்ச்டவர் அலுவலகத்திற்கு திரும்பவில்லை, அதாவது கி.பி.1916ல் ரசல் மரணமடையும் மட்டும் திரும்பவில்லை. பாஸ்டர் ரசல் மரணமடைந்தவுடன், நான் வரும் மட்டும் எதையும் செய்யக்கூடாது என்று ரூதர்போர்டு, மேக்மில்லன் என்பவரிடம் தெரிவித்திருந்தார்.

துரதிருஷ்டவசமாக, சாதுர்யமான போராட்டத்தால் ரூதர்போர்டு, தலைமை பொறுப்பை பெற்றுக் கொண்டதை குறித்து இருளுக்குபின் வெளிச்சம் மற்றும் பங்குதாரர்களுக்கான உண்மைகள் என்ற பத்திரிக்கைகளில் வெளியிடப்பட்டது. சட்டப்படி, ஜட்ஜ் ரூதர்போர்டு, வாட்ச்டவர் பைபிள் மற்றும் டிராக்ட்ஸ் சொசைட்டிக்கு ஒரு போதும் தலைமை வகிக்க இயலாது.

# ★ அத்தியாயம் 1★

## யெகோவாவின் சாட்சிகள் பாஸ்டர் ரசலின் வேதமாணவர்கள் அல்ல

வேதமாணவர்களை உருவாக்கியவர் பாஸ்டர் ரசல் என்றும், யெகோவாவின் சாட்சிகளை உருவாக்கியவர் ஜட்ஜ் ரூதர்போட்டு என்றும் சரித்திரப் பதிப்புகள் தெளிவாக விளக்கம் அளிக்கின்றன.

இரண்டும் தனித்தனி அமைப்புகள் ஆகும்.

பாஸ்டர் ரசல் தான் வேதமாணவர்களை உருவாக்கினார். இந்த ஐக்கியம் கிபி 1872ல் அலிகேனி பென்சில்வானியா என்ற இடத்தில் ஆரம்பிக்கப்பட்டது. புதிய வேதாகம வகுப்புகள் தொடங்கப்பட்டு பாஸ்டர் ரசல் என்பவரால் நடத்தப்பட்டு வந்தது. இந்த காலகட்டத்தில் பரவியிருந்த நாத்திகத்திற்கு எதிராக அநேக கிறிஸ்தவர்கள். ஆாமான சத்தியம் என தனிப்பட்ட வேதாகம வகுப்புகளை ஆரம்பித்து நடத்தி வந்தனர். ஆயினும் இருண்ட காலங்களில் ஏற்பட்ட விசுவாச பிரமாணங்களையே அவர்கள் குருட்டுத்தனமாக பற்றிக்கொண்டிருந்தனர். வேதமாணவர்கள் மட்டுமே, ஞானிகளின் அவநம்பிக்கைக்கும், பேதைகளின் நம்பிக்கைக்கும் ஒரு சவாலாக இருந்தனர் என பலரும் கருதினர்.

பாஸ்டர் ரசல் இப்படிப்பட்ட சபைகளின் கிரியைகளுக்கும் செயல்களுக்கும் தலைவரானார். கி.பி.1879ல் சீயோன் வாட்ச்டவர் உருவாக்கப்பட்டது. அது முதல் வாட்ச் டவர் பைபிள் மற்றும் டிராக்ட் சொஸைட்டி என்று அழைக்கப்படுகிறது. (யெகோவாவின்

சாட்சிகளினுடையதோடு இதை தவறாக சம்பந்தப்படுத்தக்கூடாது). பாஸ்டர் ரசல் அதன் தலைவராக அநேக ஆண்டுகள் இருந்தார். இந்த அமைப்பு வேதமாணவ அமைப்புக்கு மைய அதிகாரம் உடையதாக மாறவில்லை. இந்த அமைப்பால் வேதமாணவர்கள் இயக்கத்தை முழுவதும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர இயலவில்லை. ஏனெனில் ஒவ்வொரு வேதமாணவ இயக்கமும், தனித்தனியான சுய அதிகாரமுடைய அமைப்பாக செயல்பட்டது. வாட்ச் டவர் பைபிள் மற்றும் சொஸைட்டி என்பது, பத்திரிக்கைகள் மற்றும் கருத்தரங்குகளை நடத்தும் ஓர் இல்லமாகவே திகழ்ந்தது. மேலும் வேதபாட விரிவுரையாளர்களை மேற்கத்திய பகுதிகளிலும், உலகின் துர தேசங்களுக்கும் தொடர்ந்து அனுப்பியது.

# எதற்காக, ஏன் யெகோவாவின் சாட்சிகள் அமைப்பு உருவாக்கப்பட்டது.

யெகோவாவின் சாட்சிகள் தொடங்கப்பட்டதற்கு பின்பு துரதிர்ஷ்டவசமான சில சம்பவங்கள் நடைபெற்றன. கிபி 1916ல் பாஸ்டர் ரசலின் மறைவிற்கு பிறகு, வாட்ச் டவர் பைபிள் மற்றும் டிராக்ட் சொஸைட்டியின் நோக்கம் அடியோடு மாற்றப்பட்டது. பாஸ்டர் ரசல் அலுவலகத்தில் இருந்து வெயியேற்றப்பட்ட ஜோசப் ரூதர்போர்டு, சட்ட விரோதமாக வாட்ச்டவரின் அதிகாரத்தை பறித்துக் கொண்டார். பெரும்பான்மையான இயக்குனர்களை நீக்கி சர்வாதிகார அதிகாரத்தை ஸ்தாபித்தார். வாட்ச் டவரின் அனைத்து ஐக்கியங்களையும் தன்னுடைய தலைமையின் கீழ் ஒரே கட்டுப்பாட்டிற்குள்ளாக கொண்டு வந்தார். இந்த புதிய அமைப்பானது பாஸ்டர் ரசல் போதித்து வந்த அடிப்படையான சத்தியங்களை தலைகீழாக மாற்றிப் போட்டது. சவிசேஷ பணிகளின் முறைமைகள் மாற்றி அமைக்கப்பட்டது. மேலும் உணர்வுபூர்வமான சில செயல்பாடுகள் மூலம், அதாவது இரத்ததானம், கொடி வணக்கம் போன்ற காரியங்களை மறுத்தல் மூலம் ஜனங்களை கவர்ந்தது.

*இந்த புதிய சத்தியத்தை ஏற்க மறுத்தனர். ஆகவே, கி.பி.1917ல் இருந்து இந்த புதிய தலைமை அமைப்பில் இருந்து வெளியேறுதல் தொடங்கியது. கிபி1918ல் நான்கில் ஒரு பங்கு வேதமாணவர்கள் ஜட்ஜ் ரூதர்போர்டை விட்டு பிரிந்து, பாஸ்டர் ரசலின் போதனைகளில் உண்மையாக நிலைதிருந்தனர். (1) இவர்களே ஜட்ஜ் ரூதர்போர்டின் கொடுங்கோன்மையிலிருந்து முதலில் வெளியேறிய வேத மாணவர்கள் ஆகும்.*

*இந்த வேதமாணவர்கள், ரூதர்போர்டின் வாட்ச் டவரின் விசுவாசத்திற்கு விலகி, பரம அழைப்பிற்கான வாசல் திறந்திருக்கிறது என விசுவாசிக்கின்றனர். இவர்கள் புதிய சபைகளை உருவாக்கி, வேதாகம இலக்கிய நூல்களை வெளியிட ஊழிய அமைப்புகளை ஒழுங்குப்படுத்தினர்.*

*வாட்ச் டவரை குறித்து அநேக புத்தகங்கள் முன்னால் வாட்ச் டவரின்அங்கங்களால் வெளியிடப்பட்டுள்ளன. அதில் வில்லியம் ஸ்நெல் என்பவர் ரூதர்போர்டு வேதமாணவர்களுடைய் இயக்கத்தை விட்டு யெகோவாவின் சாட்சிகள் என்ற அமைப்பை உருவாக்கின காலத்தின் காரியங்களைக் குறித்து எழுதியனவைகளை யாரும் ஆராயவில்லை.*

*ஜட்ஜ் ரூதர்போடுக்கும் வேத மாணவர்களுக்கும் நடந்த போராட்டத்தை வாட்ச்டவர் அமைப்பில் உயர்ந்த பதவி வகித்த ஸ்நெல் என்பவர் மிகவும் ஆாமாக ஆராயந்தார். அதன் முடிவில் வாட்ச்டவரின் 30 வருட அடிமை என்ற புத்தகத்தை எழுதினார். அவர் யெகோவாவின் சாட்சியோ அல்லது வேதமாணவரோ அல்ல.*

*ஜட்ஜ் ரூதர்போர்டு மூலம் அடிப்படை சத்தியங்கள் மாற்றப்பட்டதையும் அதனால் சபையில் அதிகமாக புதிய விசுவாசிகள் உண்டானதையும் ஸ்நெல் கவனித்தார். ஆனால் ஏற்கனவே சபையில் இருந்த பாஸ்டர் ரசலின் வேத மாணவர்களின் எதிர்ப்பையும் கண்டறிந்தார். பிறகு ஸ்நெல் ரூதர்போர்டைப் பற்றி கீழ்க்கண்டவாறு கூறகிறார். (2)*

கி.பி.1925 1931 காலப்பகுதிகளின் ரசலைப் பின்பற்றியவர்களை சபையிலிருந்து வெளியேற்றக்கூடிய செயல்களில் ரூதர்போர்டு ஈடுபட்டிருந்தார். கி.பி.1931ல் நான்கில் மூன்று பங்கு ரசலின் வேதமாணவர்கள் ரூதர்போர்டை விட்டு முற்றிலும் வெளியேறினர்.

வேத மாணவர்கள் வெளியேறிய பிறகு புதிய வாட்ச் டவர் சொஸைட்டி என்ன விரும்பியது. எந்த காரியத்தை நிறைவேற்ற வேண்டும் என்று எதிர்ப்பார்த்தது என்பதை குறித்து ஸ்நெல் குறிப்பிட்டிருந்தார். (3) புதிய விசுவாசிகள் பற்றி அவர் கூறியதாவது (4)

சபைக்காக இரத்தம் சிந்தி கடின உழைப்பால் திறம்பட செயல்பட்ட நான்கில் மூன்று பங்கு வேதமாணவர்கள் வெளியேறிய பின் உருவாகிய சபைக்கூட்டம் எனக் கூறினார்.

மேலும் அவர் கூறுகையில் (5)

பழைய வேதமாணவர்கள் ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டவர்களாக உண்மை கிறிஸ்தவர்களாக சிந்தையிலும் செயல்களிலும் அவர்களுக்குள் எந்த பிரிவினைகளும் உண்டாயிருந்ததில்லை. மேலும் 2 தீமோத்தேயு 4 3ல் பவுல் கூறிய அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல் என்ற வசனத்தால் எச்சரிக்கப்பட்டிருந்தார்கள்.

இன்றைய வேதமாணவர்களுக்கும் பழைய வேதமாணவர்களுக்கும் பாஸ்டர் ரசல், ஸ்தாபகராக வழிகாட்டியாக இருந்தார்.

பாஸ்டர் ரசலின் வேரமாணவர்களை பற்றி ஸ்நெல் கூறுவதில் இருந்து, ரூதர்போர்டு ஏன் அவர்களை தன் வசப்படுத்த முடியவில்லை என அறிய முடிகிறது.

வேதமாணவர்கள் உறுதியான தனித்தன்மை உடையவர்களாயிருந்தனர். அவர்கள் தனியே சுதந்திரமாக

சத்தியங்களை ஆராயவும், கிறிஸ்துவ ஜீவியத்தில் நிலைத்திருக்கவும் பலவிதமான சபை பிரிவுகளிலிருந்து வெளியேறினர்வர்கள். மேலும் தாங்கள் வெளியேறிய சபைகளின் கடுமையான கட்டுபாடுகளையும், உண்மை கிறிஸ்தவராக கூட வாழ முடியாத சூழ்நிலைகளையும் வேதமாணவர்கள் உணர்ந்திருந்தனர். உண்மையிலேயே ஆதி திருச்சபை காலத்திற்கு பிறகு வேதமாணவர்கள் அதிக உறுதியான தனித்தன்மை வாய்ந்தவர்களாக இருந்தனர். தனித்திருத்தல் என்கிற அவர்களுடைய நோக்கமே, பொது வழக்குச் சொல்லாயிற்று. இந்த உறுதியான தனித்தன்மை வாய்ந்தவர்கள் ஒவ்வொரு சபையின் தன்னாட்சியில் நம்பிக்கை வைத்திருந்தனர். அவர்களுக்கு ரூதர்போர்டை போலவோ அவருக்குப் பின் வந்த வாட்ச் டவர் தலைவர்களை போலவோ ஒரு சர்வாதிகாரி தேவையில்லை.

## கிபி 1931ல் யெகோவாவின் சாட்சிகள் சபை ஸ்தாபிக்கப்பட்டது

நான்கில் மூன்று பங்கு பாஸ்டர் ரசலின் வேதமாணவர்கள் வெளியேற்றப்பட்ட பின் மீதமுள்ளவர்கள் ரூதர்போர்டின் மாறுபட்ட உபதேசங்களுக்கு கீழ்ப்படிந்தவர்களாக, புதிய இயக்கம் உருவானது, கி.பி.1931ல் அதாவது பாஸ்டர் ரசலின் மரணத்திற்கு பிறகு 15 ஆண்டுகள் கழித்து யெகோவாவின் சாட்சிகள் சபை உருவாக்கப்பட்டது. இதனை ஸ்தாபித்த ஜோசப் ரூதர்போர்டு கிபி 1931 ஜீலை 26ல் ஓகியோவில் உள்ள கொலம்பஸில் நடந்த அகில உலக மாநாட்டில் இந்த புதிய பெயரை முன்மொழிந்தார். அந்த தீர்மானத்தை நிலைவேற்றியவர்கள் வேதமாணவர்களோ அல்லது சகோதரர் ரசலை பின்பற்றியவர்களோ அல்ல. (கிட்டதட்ட 75 சதவிகித வேதமாணவர்கள் ஏற்கனவே வெளியேறிவிட்டனர்) அதிலிருந்து தங்களை யெகோவாவின் சாட்சிகள் என்று அவர்கள் அழைத்துக் கொண்டனர்.(4)

பாஸ்டர் ரசலின் வேதமாணவர்கள் யெகோவாவின் சாட்சிகளாக மாறவில்லை என்பதை நன்றாக கவனிக்கவும். (ஜட்ஜ்

*ரூதர்போர்டின் மாறுபாடான போதககத்தால் அவரது இயக்கம் அநேக பழைய அங்கத்தினர்களை 1916லிருந்து 1928 வரை (சரியாக 1931) இழந்தது என்று விக்கிமீடியா வும் கூறுகிறது.*

*கிபி 1931ல் ரூதர்போர்டு தன்னுடைய இயக்கத்திற்கு யெகோவாவின் சாட்சிகள் என்று பெயர் மாற்றியபொழுது பெரும்பான்மையான பாஸ்டர் ரசலின் வேதமாணவர்கள் யெகோவாவின் சாட்சிகள் இயக்கத்தை (**J.W**) விட்டு வெளியேறியிருந்தனர்.*

☆☆☆

## ★ அத்தியாயம் இரண்டு ★

# வேதமாணவர்கள் என்ன ஆனார்கள் ?

முன்னமே பார்த்த பிரகாரம் கிபி 1926ல் ஜட்ஜ் ரூதர்போர்டு குணாதிசயங்களில் வளர வேண்டும் என்ற நமது அடிப்படை சத்தியத்தை தூக்கி எறிந்த காலகட்டத்திலேயே வேதமாணவர்களுக்கு என்ன நேர்ந்தது என அப்பொழுது இருந்தவர்களால் எனக்கு தெரியவந்தது. இந்த சம்பவமே வாட்ச்டவாலிருந்து வேதமாணவர்கள் முற்றிலும் வெளியேற காரணமாயிருந்தது. அதன்பின் கிபி 1929 கிபி 1932ல் ஜட்ஜ் ரூதல்போர்டின் வாட்ச் டவரிலிருந்து அநேகர் வெளியேறி வேதமாணவர்கள் என்ற அமைப்பாக இன்று வரை நடத்தி வருகின்றனர். எவ்வாறு ?

பிட்ஸ் பார்க்கில் கிபி 1929 ஆகஸ்டில் கிட்டதட்ட 80 வேதமாணவர்கள் வாட்ச் டவரிலிருந்து வெளியேறினர். அவர்களால் என்ன செய்யமுடியும் ? எங்கே போக முடியும்? அக்டோபர் 31, பாஸ்டர் ரசலின் வருடாந்திர நினைவு நாள். அந்த நாளில் மூன்று நாள் விசேஷித்த ஆராதனை மற்றும் கருத்தரங்கு கூட்டத்தை ஆயத்தப்படுத்தி கிபி 1918லிருந்து வாட்ச் டவரிலிருந்து வெளியேறிய வேதமாணவர்கள் அனைவருக்கும் அழைப்பு விடுத்தனர்.

என்ன ஒரு வெற்றி பிட்ஸ்பர்க் கூட்டம் கிபி 1942வரை (இரண்டாம் உலகப் போரினால் குறைவான பிரயாணம்) அநேகருக்கு ஒரு ஆண்டு விழாவாக இருந்து வந்தது. நானும் என்னுடைய பெற்றோருடன் டெட்ராய்ட் (னுநவசடிவை) லிருந்து பிட்ஸ்பர்க்குக்கு காரில் சென்று அநேகர் மீண்டும் இணையும்

கூட்டத்தில் கலந்து கொண்டு இருக்கின்றேன். நான் என் வாலிப வயதில் ஒரு ரயிலில் பயணம் செய்து கடைசியாக இந்த பிட்ஸ்பர்க்கில் மீண்டும் இணையும் கூட்டத்தில் கலந்து கொண்டிருக்கிறேன்.

புதியஐக்கியங்கள் உருவாயின. ஏற்கனவே கிபி 1918ல் இருந்து வெளியேறிய வேதமாணவர்களும், தற்போது வாட்ச் டவரிலிருந்து வெளியேறிய வேத மாணவர்களும் இணைந்து அது ஒரு மிகப்பெரிய அமைப்பாக உருவெடுத்தது. அனைத்து சபைகள் மற்றும் ஐக்கியங்கள், தனித்துவம் வாய்ந்தவைகள், பவுலின் போதனைகளை பாஸ்டர் ரசல் காலத்தில் பின்பற்றியது போல பின்பற்றினார்கள். கிபி 1929க்கு பிறகு வெளியேறிய வெதமாணவர்கள் ஜனங்களுக்கு முன்பாக சிறந்த சத்திய சாட்சிகளாக திகழ்ந்தனர். கிபி1932ல் ஜனங்களுக்கு சத்திய சாட்சிக்கான நிகழ்ச்சிகளை கொடுக்க புதிய ஊழியத்திற்கான ஒரு அமைப்பை உருவாக்கினார்.

கிபி 1932 மற்றும் 1935ல் அதிகப்படியான விசுவாசிகள் வெளியேறத் தொடங்கினர். இவர்களில் அநேகர் 1932ல் வெளியேத்தயங்கி முடிவாக ரூதர் போர்டை விட்டு வெளியேறிய பாஸ்டர் ரசலின் வேதமாணவர்கள் ஆகும். மேலும், ரூதர் போர்டின் உபதேசமான தேவனுடைய திட்டத்தில் இஸ்ரயேல் ஜனங்களுக்கு பதிலாக யெகோவாவின் சாட்சிகள் மாற்றப்பட்டுள்ளனர் என்ற உபதேசத்தை ஏற்காத விசுவாசிகளும் ஜட்ஜ் ரூதர் போர்டை விட்டு வெளியேறினர். அதன் பிறகு அநேக யெகோவாவின் சாட்சிகள் வெளியேறி வேதமாணவர்கள் இயக்கத்துடன் இணையத்தொடங்கினர். கிபி 1940ல் முன்னாள் யெகோவாவின் சாட்சிகள் கொண்ட வேதமாணவர் சபைக்கு வேதமாணவர் சபைக்கு நான் மூப்பராக தேர்வு செய்யப்பட்டு இன்று வரை செயல்பட்டு வருகிறேன்.

## ரூதர்போர்டு மற்றும் அவருடைய புதிய இயக்கம்

புதிய உபதேசங்களின் அடிப்படையில் ஜட்ஜ் ரூதர் போர்டு புதிதாக உருவாக்கப்பட்ட சபை கூட்டத்திற்கு புதிய பெயர்

சூட்டினார். இவர்கள் நிச்சயமாக பாஸ்டர் ரசலின் வேதமாணவர்கள் அல்ல. யெகோவாவின் சாட்சிகளை உருவாக்கியவர் ஐட்ஜ் ரூதர் போர்டு. பாஸ்டர் ரசல் அல்ல. பாஸ்டர் ரசல் கி.பி.1916ல் மரணம் அடைந்தார். யெகோவாவின் சாட்சிகள் சபை கி.பி.1931ல் உருவாக்கப்பட்டது. பாஸ்டர் ரசல் இன்றும் அவருடைய உபதேசத்தில் நிலைத்திருக்கும் வேத மாணவர்களை உருவாக்கினார். ஐட்ஜ் ரூதர்போர்டு பாஸ்டர் ரசலின் தனித்துவமான சபை சுதந்திரத்தை விசுவாசித்த வேதமாணவர்களை வெளியேற்றி ரசலின் உபதேசங்களை நீக்கினார். மேலும் வேத மாணவர்கள் என்ற பெயருக்கு பதில் யெகோவாவின் சாட்சிகள் என்ற புதிய பெயரையும் சூட்டின்கொண்டனா.

பாஸ்டர் ரசலின் வேத மாணவர்களும், ரூதர்போர்டின் யெகோவாவின் சாட்சிகளும் தனித்தனியே இயங்கும் அமைப்புகள் என்று சந்தேகத்திற்கு அப்பாற்ப்பட்ட சரித்திர பதிப்புகள் மூலம் நாம் தெளிவாக அறிய முடிகிறது.

ஆயினும் ஒரு விஷயம் குழப்பமாகவும், சந்தேகத்திற்கு இடமும் கொடுக்கிறது. எதற்காக யெகோவாவின் சாட்சிகள் பாஸ்டர் ரசலை தங்களின் ஸ்தாபகர் என் று கூறகின்றனர்? நிச்சயமாக அவருடைய உபதேசங்களை அவர்கள் ஏற்றுக்கொள்வதினால் அல்ல. உண்மையிலேயே அவர்கள் பாஸ்டர் ரசலின் அடிப்படை சத்தியங்களை மறுக்கிறார்கள். பாஸ்டர் ரசலின் வேத மாணவர்கள் நித்திய அழிவைப் பெறும் பொல்லாத ஊழியக்காரன் வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்றும் கூறகின்றனர். (வேதமாணவர்கள் எந்தவித எதிர்ப்பும் இல்லாமல் மற்ற சபை விசுவாசிகளும் நித்திய வாழ்வை சுதந்தரிக்க வேண்டும் என்று ஆவலுடன் செயல்படுகின்றனர்.)

எந்த பாவ காரியத்தால் சகோதரர் ரசலின் வேதமாணவர்கள் மிகவும் பொல்லாதவர்கள் என்னப்படுகின்றார்கள்? எந்த சகிக்க முடியாத பாவத்தால் அவர்களுக்கு நித்திய அழிவு காத்திருக்கிறது? மிகவும் சுலபமாக பதில் அளிக்க முடியும். என்னவெனில், வேத

*மாணவர்கள் சகோதரர் ரசலின் வேதாகம உபதேசங்களை உறுதியாக கடைபிடிப்பதால் அதாவது அவர்கள் யெகோவாவின் சாட்சிகளின் புது உடதேசங்களை ஏற்க மறுப்பதால் ஆகும். யெகோவாவின் சாட்சிகள் வேத மாணவர்களின் உபதேசங்களை முற்றிலும் தவறானது நித்திய நியாயத்தீர்ப்புக்குரியது என்று எண்ணி கொண்டிருக்கின்றனர்.*

*யெகோவாவின் சாட்சிகள் பாஸ்டர் ரசலை தங்கள் ஸ்தாபகராக கூறிக்கொள்வது எவ்வளவு அபத்தமாக இருக்கிறது. இப்படிப்பட்ட தவறான உபதேசங்களை பாஸ்டர் ரசலைத் தவிர வேறு யாரிடமிருந்து வேத மாணவர்கள் பெற்றார்கள்? பாஸ்டர் ரசலின் உபதேசங்கள் தவறானதாக இருக்க, ஏன் யெகோவாவின் சாட்சிகள் சகோதரர் ரசலை தங்கள் ஸ்தாபகர் என்று கூறிக்கொள்கின்றனர்?*

# "சரித்திர பின்னணி"

*யெகோவாவின் சாட்சிகள் சகோதரர் ரசலை தங்கள் வழிகாட்டி என்று கூறிக்கொள்ள ஒரே ஒரு காரணம் மட்டும் தான் இருக்கிறது. சரித்திர பின்னணி கிறிஸ்தவ சபைகளில் யெகோவாவின் சாட்சிகள் என்பது புதிய சபையாகும். கி.பி.1931ல் உருவாக்கப்பட்டதால் சரித்திர பின்னணி அதற்கு தேவைப்பட்டது. கிபி1930, 40, 50 களில் எங்கள் இயக்கம் கிபி1931ல் உருவானது என்று சொல்லிக் கொண்டதை எண்ணிப் பாருங்கள். பாஸ்டர் ரசலை தங்கள் ஸ்தாபகராக கூறிக்கொள்வதன் மூலம் 1800 களிலிருந்து தாங்கள் ஒரு கிறிஸ்தவ சபை என்று கூறிக்கொள்கின்றனர். ஆதாமின் குமாரன் ஆபேல் தான் முதல் யெகோவாவின் சாட்சி என்று கூறிக்கொண்டு தாங்கள் தான் கிறிஸ்தவ சபைகளுக்கெல்லாம் முன்பாக தோன்றியவர்கள் என்று தங்களுக்கென்று ஒரு சரித்திர பிண்ணனியை உருவாக்கிக் கொள்ள முயற்சிக்கின்றனர். இரு எவ்வளவு அபத்தமாக இருக்கின்றது.*

*பாஸ்டர் ரசல் கிபி1870ல் வேதமாணவர்களை உருவாக்கினார் என்றும், ஐட்ஜ் ரூதர்போர்டு கிபி 1931ல் யெகோவாவின் சாட்சிகளை*

உருவாக்கினார் என்றும் சரித்திர உண்மைகள் தெளிவாக கூறகின்றன. எனவே இரண்டு அமைப்புகளும் தனித்தனியான இரண்டு வெவ்வேறு அமைப்புகளாகும்.

இதனை விளக்குவதற்காக உதாரணமாக லூாத்தரன் மற்றும் ரோமன் கத்தோலிக்க சபைகளை எடுத்துக் கொள்வோம். ஆதியில் இரண்டும் ஒரே சபையாக இருந்தன. ஆனால் லூாத்தரன் சபை போப்பு மார்க்கத்தில் இருந்து வெளியேறிவிட்டது. ஆகவே இரண்டும் தனித்தனியான அமைப்புகள். லூாத்தரன் அமைப்பு மார்ட்டின் லூாத்தரை பின்பற்றுகிறது. ரோமன் கத்தோரிக்க சபை, போப்பை பின்பற்றுகிறது. லூாத்தரன் சபை, போப்பு மார்க்கத்தில் ஆதியில் இருந்ததால் போப்பு தான் அவர்களை உருவாக்கினார் என்று கூற இயலாது. போப்புகள் அவர்களுடைய உபதேசத்தை பின்பற்றும் ரோமன் கத்தோலிக்க சபைகளை உருவாக்கியர்கள்.

பேப்டிஸ்டு மற்றும் பிரஸ்பிடேரியன்ஸ் இருவரும் நித்திய ஆக்கினையை விசுவாசிக்கின்றனர். ஆதபோல வேதமாணவர்கள் மற்றம் யெகோவாவின் சாட்சிகள் நித்திய அழிவு உண்டு என்று விசுவாசிக்கின்றனர். இந்த ஒற்றுமைகள் மூலம் இரண்டு அமைப்புகளும் ஒரே அமைப்பு என்று சொல்ல இயலாது. பெரும்பாலான யெகோவாவின் சாட்சிகள் உயர்ந்த எண்ணம் கொண்டவர்கள், மற்ற மனிதர்களைப் போல தேவனுடைய நித்திய ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ள ஆசைப்படுகிறார்கள் என்று வேதமாணவர்கள் நினைக்கின்றனர். (இப்படிப்பட்ட எண்ணத்தை அவர்கள் எங்கள் மீது வைக்க வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்.)

முக்கிய குறிப்பு

வேதமாணவர்கள் என்ற பெயர் சரியானது அல்ல என்று

எண்ணி ஜட்ஜ் ரூதர் போர்டு தன்னுடைய அமைப்பிற்கு யெகோவாவின் சாட்சிகள் என்று பெயர் மாற்றினார். எதற்காக யெகோவாவின் சாட்சிகள் என்று தேர்வு செய்தார் ?

யெகோவாவின் சாட்சிகள் என்ற பெயர் வேதத்தில் ஏசாயா அதிகாரம் 43 மற்றும் 44ல் மூன்று முறை சொல்லப்பட்டுள்ளது. (ஏசாயா 43 10 , 12) (44 8) இங்கு யூதர்கள் பற்றி ஏசாயா பேசி இருக்கிறார் என்று வேதமாணவர்களால் நன்கு அறிந்து கொள்ள முடிகிறது. ஏசாயா 43 மற்றும் 44ம் அதிகாரங்களின்படி, யெகோவாவின் சாட்சிகள் என்பவர்கள் எகிப்திலிருந்து மிட்கப்பட்டவர்கள். ஒரு காலத்தில் தேவனுக்கு மிருக பலி செலுத்தியவர்கள். உலகமெங்கும் இருந்து மீண்டும் தங்களுடைய சுயதேசத்தில் ஒன்று சேர்க்கப்பட வேண்டியவர்கள். இந்த காரியங்கள் அனைத்தும் யூதர்களைப் பற்றியது ஆகும். யூதர்களே உண்மையான யெகோவாவின் சாட்சிகள் ஆவார்கள். ரூதர்போர்டை பின்பற்றியவர்கள் அல்ல.

## ★ அத்தியாயம் மூன்று ★

# மாற்று உபதேசங்களும் யூத விரோத கொள்கைகளும்

ஜட்ஜ் ரூதர்போர்டு, பாஸ்டர் ரசலின் உபதேசங்களை மாற்றி அமைப்பதையே தலையாய பணியாக செயல்பட்டுக் கொண்டிருந்தார். மாற்று உபதேசங்கள் என்ற மேடையை அமைத்துக் கொண்டு தன்னுடைய பணியை செய்து வந்தார். கிபி 1932ல் ரூதர் போர்டின் இரண்டாவது வால்யூமான, வின்டிகேஷன் (ஏனைேைஉயவனைே) என்ற புத்தகத்தில் தேவனுடைய ஜனங்கள் என்ற நிலைமையில் இருந்து யூதர்கள் நித்தியமாக முற்றிலுமாக அகற்றப்பட்டு அந்த இடத்தில் புதிய இஸ்ரேல் அதாவது ஜட்ஜ் ரூதர்போர்டின் யெகோவாவின் சாட்சிகளை தெரிந்து கொண்டிருக்கிறார். என்று வெளியிட்டிருந்தார். அதன் மூலமாக ரூதர்போர்டு மாற்று வேத உபதேசத்தை ஆதரித்தார். அதாவது பாரம்பரியமாக போதித்து வரும் ரோமன் மற்றம் ஆர்தோடெக்ஸ் கர்தோலிக்கர்கள் மற்றும் புராட்டஸ்டாண்டு மத பிரிவுகள் ஆகியவற்றின் போதனைகளை ஆதரிக்கத் தொடங்கினார்.

பழைய ஏற்பாட்டில் தேவன் இஸ்ரயேலுக்கு கொடுக்கும் எதிர்கால ஆசீர்வாதங்கள் எல்லாம் கிறிஸ்தவர்களுக்குத் தான் பொருந்தும் என்றும் அதுவும் ரூதர்போர்டின் போதனைகளை பின்பற்றும் யெகோவாவின் சாட்சிகளுக்குத்தான் பொருந்தும் என்கிறதான மாறுபட்ட உபதேசங்களை பிரயோகித்தார். இதில்

வேடிக்கையான விஷயம் என்னவெனில், வேதத்தில் இஸ்ரயேலுக்கு என்று கூறப்பட்ட சாபங்கள் மட்டும் யூதர்களைச் சாரும் என்று கூறி இருக்கிறார்.

# துக்கமான ஓர் உண்மையை பார்ப்போம்

மாற்று போதனை நியாயப்படுத்தப்பட்டது போல கிட்டதட்ட 1900 வருடங்கள் கொண்ட கிறிஸ்தவ சரித்திரத்தின் யூத விரோத போதனை ஜட்ஜ் ரூதர்போர்டினால் இயற்கையாக தவிர்க்க இயலாமல் கடைபிடிக்கப்பட்டது.

# ரூதர் போர்டு மற்றும் யூத விரோத கொள்கை

ஜட்ஜ் ரூதர் போர்டு ஒரு யூத விரோத கடிதத்தை உறிட்லருக்கு அனுப்பி வைத்தார். ஏன் இந்த காரியம் நிகழ்ந்தது ? 1934ம் வருடம் யெகோவாவின் சாட்சிகள் புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளவைகள் என்னவெனில் (7)

ஜூன் மாதத்தில் இயக்கத்தின் தலைவரான ஜட்ஜ் ஜோசப் ரூதர்போர்டு தங்களுடைய அமைப்பிற்கு சொந்தமான இடத்தை தங்களுக்கு சாதகமாக்கிக் கொள்ளவும் அதற்கான வேலைகளை தொடரவும், ஜெர்மனிக்கு சென்று இருந்தார். எதிரிகள் (நாசி) அரசாங்கத்திற்கு தங்களைப் பற்றி தவறாக செய்தி கொடுத்திருந்ததால் உண்மையை பிரகடனப்படுத்த கிபி 1933 ஜூன் 25ம் தேதி, சுமார் 7000க்கும் மேற்பட்ட யெகோவாவின் சாட்சிகள், பெர்லின் என்ற இடத்தில் கூடினார்கள். ஏகமனதாக ஒர தீர்மானத்தை நிறைவேற்றி அதனை லட்சக்கணக்கில் பிரதி எடுத்து ஜெர்மனி நாடு முழுவதும் விநியோகித்தனர். அந்த தீர்மானம் (ஒரு பகுதி) என்னவெனில்.

எங்களுடைய ஊழியத்திற்காக எங்களுக்கு யூதர்களிடம் இருந்து பண உதவி கிடைக்கிறது என்று தவறாக எங்களது எதிரிகள் குற்றம் சாட்டுகின்றனர். ஆனால் இந்த நிமிடம் வரை ஒரு சிறிய அளவில் கூட பண உதவி யூதர்களிடம் இருந்து எங்களுக்கு

கிடைக்கவில்லை. உலகையே அடக்குகிற மிகப்பெரிய வல்லரசு நாடு, ஆங்கிலோ அமெரிக்கா வல்லரசாகும். அதாவது பிரிட்டிஷ் வல்லரசின் ஒரு பாகம் தான் இந்த அமெரிக்க ஐக்கிய நாடாகும்.

பிரிட்டிஷ் அமெரிக்கன் வல்லரசின் யூத வியாபாரிகள் அநேக நாடுகளின் ஜனங்களை பயன்படுத்தி நசுக்கி பெரிய வியாபாரத்தை செய்கின்றனர். இந்த உண்மை வியாபாரக் கோட்டையாகிய லண்டன் மற்றும் நியூயார்க் நகரங்களுக்கு பொருந்துகிறது. நியூயார்க் தலைநகரத்தை பற்றிய ஒரு பழமொழி மூலம் இது வெளியரங்கமாகிறது. அது என்னவெனில் யூதர்கள் சொந்தமாக்குகின்றனர். ஐரீஸ் கத்தோலிக்கர்கள் ஆளகை செய்கின்றனர். அமெரிக்காவின் விலையை செலுத்துகின்றனர்.

எங்களுக்கு மேலே குறிப்பிட்டு உள்ள யாருடனும் சண்டை கிடையாது. ஆனால் நாங்கள் யெகோவாவின் சாட்சிகளாக, வேதத்தில் கூறப்பட்டுள்ள சத்தியத்திற்கு கீழ்ப்படிந்து தேவன் விரும்புகிறதை செய்கிறவர்களாகவும் இருந்து தேவனைக்குறித்தும் அவரது நோக்கத்தைக் குறித்தும் மற்றவர்களுக்கு அறிவிக்கிற வேலையை செய்து வருகிறோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இது ஒரு யூத விரோத கொள்கையே.

### ஜெர்மெனியில் ஜட்ஜ் ரூதர்போர்டும் அவருடைய யெகோவாவின் சாட்சிகளும், ஹிட்லரை முகஸ்துதி செய்து அவரது சலுகையை பெறுவதில் தோல்வி அடைந்தனர்

கிபி 1957ல் வெளியிடப்பட்ட தேவனுடைய திட்டத்தில் யெகோவாவின் சாட்சிகள் என்ற புத்தகம் விளக்குவதாவது. இந்த செய்தியை அந்த இயக்கத்தின் தலைவர்கள் மூலமாக, அரசாங்கத்தின் (நாசி ஜெர்மெனி) உயர் அதிகாரிகள் ஒவ்வொருவருக்கும் தகவல் அனுப்பப்பட்டது. (8) இந்த செய்தி ஒவ்வொரு அதிகாரிக்கும் ஹிட்லருக்கும் அனுப்பி வைக்கப்பட்டது. சர்வதேச இயக்கத்தை

அவதூறு செய்வதோடு கூட நாசி அரசாங்கத்திற்கு இசைவாக இந்த பிரகடனம் இருந்தது. அது கூறுவதாவது (9)

கொடுமை செய்து பெரிய வியாபார ரீதியாக செயல்படுவர்களையும் (அமெரிக்கா பிரிட்டிஷ் யூதர்கள்) நாட்டின் அரசியல் விவகாரங்களில் தவறான மதசார்பான செல்வாக்குகளையும் கண்டித்து ஜெர்மனி அரசாங்கம் அறிக்கை வெளியிட்டிருக்கிறது. எங்களுடைய நிலைமையும் இதேதான். (எங்களுடைய என்பது முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்) ரூதர்போர்டு இந்த கொள்கைகளை எல்லாம் முபமையாக ஒத்துக்கொள்கிறேன் என்று கூறியது தான் நம்பமுடியாத ஒன்றாகும். ஆனால் ரூதர்போர்டு செய்த மிகப்பெரிய தவறு என்னவெனில். (10)

ஜெர்மனி அரசாங்கத்தின் கொள்கைகளை எதிாப்பதற்கு பதிலாக, யெகோவா தேவன் கிறிஸ்து மூலம் இப்படிப்பட்ட கொள்கைகளை கொடுத்து முபமையாக அங்கீகரிப்பார், இந்த கொள்கைகளுக்கு நாங்கள் அனைவரும் கீழ்ப்படிந்து செயல்படுவோம் என்று கூறியதுதான்.

இது நம்பமுடியாதது, உண்மையிலேயே ஹிட்லரின் கொள்கைகளை ரூதர்போர்டு நம்புவதாக கூறினார். ஆனால் ,ஹிட்லரின் அரசியல் மற்றும் பொருளாதார கொள்கைகளை, பிதாவாகிய தேவன் மட்டுமே நிறைவேற்ற முடியும் என்று கூறினதே பெரும் தவறாக ஆனது. இதை ஹிட்லானால் நிறைவேற்ற முடியாது என்பதை இது உணர்த்தியது. இதுவே ஹிட்லருக்கு யெகோவாவின் சாட்சிகள் மீது எப்போதும் தீராத கோபத்திற்கு காரணம் ஆயிற்று. ஐரோப்பா முழுவதையும் தான் ஆளகை செய்ய வேண்டும் என்பது ஹிட்லரின் கனவு. ரூதர்போர்டின் யூத விரோத கொள்கையின் நன்மைகளை இந்தக் கூற்று மங்கச் செய்தது.

ரூதர்போர்டு ஹிட்லரை சந்தோஷப்படுத்த எடுத்த முயற்சி தோல்வியடைந்தது. துரதிஷ்டவசமாக ரூதர்போர்டு தன்னுடைய யூத

விரோத கொள்கையை தெளிவாக்கியதின் மூலம் தன்னுடைய சுயக்கருத்தை வெளிப்படுத்தினார். கி.பி.1934ல் ஆதரிக்கப்பட்ட மக்கள் என்ற புத்தகத்தில் 5ம் பக்கத்தில் ரூதர்போர்டு குறிப்பிடப்பட்டுள்ளது என்னவெனில், தற்கால யூத வியாபாரிகள் மிகவும் பணக்காரர்களாகவும் அதிகமான உலோபிகளாகவும் இருக்கின்றனர். பொது ஜனங்களில் பெரும் வியாபாரிகளாக இருப்பவர்கள் யூதர்களே. மேலும் யூதர்கள் கொடூரமான பெருமை மற்றும் சுயநலம் நிறைந்தவர்கள். கிபி 1937ல் எதிராளிகள் (யீ 281) என்ற புத்தகத்தில் யூதர்கள் என்பவர்கள் தான் என்கிற அகங்காரம் கொண்டவர்கள். அவர்களுக்கு தங்கள் ஆதாயத்தின் மீதுதான் அக்கறை அதிகம். என்று ஜட்ஜ் ரூதர்போர்டு எழுதினார்.

# தற்பெருமையின் பேட்டி

ரூதர்போர்டு ஹிட்லரை நம்பச் செய்வதில் தோல்வி கண்டார். ஆனால் ரூதர் போர்டின் கனவு, உலகத்தை சுதந்தரித்து கொள்ளும் ஆசை ஓயவில்லை. ஹிட்லர் ஜெர்மெனியை மட்டும் ஆளகை செய்தார். ஆனால் ரூதர்போர்டு பூமியில் யெகோவாவின் மத அரசாங்கத்தை தனது மோசமான கனவில் ஆட்சி செய்தார்.இதை உன்னால் மிஞ்ச முடியாது. மேலும். ரூதர்போர்டு ஹிட்லருக்கு பயமுண்டாகும்படி தான் செயல் பட வேண்டும் என்று நினைத்தார். கீழ் வருபவற்றை பார்க்கும் போது அபத்தமாகத் தோன்றுகிறது. ஆனால் இவைகள் நடந்தேறின.

கிபி 1934 அக்டோபர் 7 ல் யெகோவாவின் சாட்சிகளின் சபை அங்கத்தினர்கள் அனைவரும் ஜெர்மெனியில் கூடி ஒரு கடிதத்தை வாசித்து அதனை ஹிட்லர் அரசாங்கத்திற்கு அனுப்பிவைத்தனர். அதில் குறிப்பிடப்பட்டுள்ள செய்தி என்னவெனில் தேவனுடைய விதிமுறைகளுக்கும் உம்முடைய விதிமுறைகளுக்கும் முரண்பாடுகள் காணப்படுகின்றன... ஆகவே எந்த ஒரு சூழ்நிலையிலும் நாங்கள் தேவனுடைய

கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து அவருடைய வார்த்தைகளை தியானித்து அவர் கட்டளையிட்டபடி அவரை ஆராதித்து அவருக்கு ஊழியம் செய்வோம் என்று உங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறோம் என்பதாகும்.

அதே நாளில் 49 நாடுகளைச் சேர்ந்த யெகோவாவின் சாட்சிகள் விசேஷமாகக் கூடி கீழ்க்கண்ட தந்தியை ஹிட்லருக்கு அனுப்பி வைத்தனர். உங்களுடைய முறையற்ற நடவடிக்கையால் பூமியில் நல்ல மனிதர்களுக்கு உபத்திரவங்களும், யெகோவாவுக்கு அவமரியாதையும் உண்டாகிறது. யெகோவாவின் சாட்சிகளை மீண்டும் மீண்டும் தொந்தரவு செய்வதை நிறுத்திக் கொள்ளுங்கள். இல்லையென்றால் தேவன் உங்களையும், உங்கள் கட்சியையும் அழித்துப் போடுவார். ஹறயமந பத்திரிக்கை 8/ 22/95.

ரூதர்போர்டின் இந்த அதிரடி நடவடிக்கையால் 50 நாடுகளை சேர்ந்த யெகோவாவின் சாட்சிகள். நீர் திருந்தவில்லையென்றால் தேவன் உன்னை அழித்துவிடுவார் என்று ஹிட்லருக்கு தந்திகளை அனுப்பினார். இதனால்அதிக வெறுப்பு அடைந்த ஹிட்லர் அனைத்து யெகோவாவின் சாட்சிகளையும் சுற்றி வளைத்து அவர்களை கொடுமைப்படுத்தும் நிலையங்களில் போட்டு தண்டிக்கும்படி ஆணையிட்டார்.

காரர் சு. விட்டிங் என்பவர் அலுவலக வேலையாக ஹிட்லருடன் இருந்தார். அவர் இந்த கடிதத்தை பார்த்தவுடன் ஹிட்லர் குறித்து எழுந்து தன்னுடைய கைகளை கோபத்துடன் இறுக்கி பிடித்து இந்த கூட்டம் ஜெர்மெனியிலேயே பூண்டோடு அழிக்கப்படும் என்று கோபத்துடன் கூறினார் என்று கூறகிறார். (கிபி 1947, நவம்பர் 13 ல் ஃபிராங்க் ஃபர்ட் நோட்டரி பப்ளிக்கினால் பதிவு செய்யப்பட்டுள்ளது.

என்னவொரு துரதிருஷ்டவசமமான தற்பெருமையான காரியங்கள்!.

தேவகோபத்தை ஒருவர் மேல் கட்டளையிட நினைக்கும் ஜட்ஜ் ரூதர்போர்டுக்கு என்ன ஒரு கர்வம். அதேபோல் ஹிட்லரின் உள்ளம் ஒருவனை அழிப்பதற்கு எந்த அளவுக்கு கொடூரமான இரக்கமற்றதாக இருந்தது.

சண்டையிடும் விநோதமாணவர்களைக் குறித்த கடைசியான ஒரு வார்த்தை. ஹிட்லர் திருந்தவில்லையென்றால் அவரை தேவன் அழித்து போடுவார் என்று 50 நாடுகளை சேர்ந்த யெகோவாவின் சாட்சிகள் ஜட்ஜ் ரூதர்போர்டை ஆதரித்தனர். ஆகவே, உலகெங்கும் இருக்கிற பெரும்பாலான யெகோவாவின் சாட்சிகள் ரூதர்போர்டுக்கு ஆதரவாக இருந்தனர். இதுவே யெகோவாவின் சாட்சிகள் வேதமாணவர்களாக இருந்தது இல்லை, இப்போதும் இல்லை என்பதை நிரூபிக்கிறது.

பாஸ்டர் ரசலின் வேதமாணவர்கள் தேவனால் எவருக்கும் அழிவு உண்டாக வேண்டும் என ஒரு போதும் கூறியதில்லை. பிறரது அழிவை விரும்புகிறவர்கள் பாஸ்டர் ரசலின் வேதமாணவர்கள் அல்ல, இவர்கள் ரூதர்போர்டின் யெகோவாவின் சாட்சிகள் ஆகும்.

கிபி 1933 மற்றும் கிபி1934ல் ஹிட்லருக்கும் ரூதர்போர்டுக்கும் இடையே ஏற்பட்ட மோதல்கள் கி.பி.1934 இயர்புக் ஆப் யெகோவாவின் சாட்சிகள் என்ற புத்தகத்தில் காணப்படுகிறது. வருடங்கள் செல்ல செல்ல இந்த புத்தகம் ரூதர்போர்டை பற்றி குற்றம் சாட்டுவது மிகவும் சரியாக காணப்பட்டது. ஆகவே கி 1974 வருட புத்தகத்தில் ஜெர்மன் வாட்ச் டவர் கிளையின் தலைவரை பிரகடனத்திற்கு குற்றம் சாட்டி செய்திகள் எழுதப்பட்டிருந்தன. ஆனால் பதிவு செய்யப்பட்ட செய்திகளை மாற்ற இயலாது. 1934 வருட புத்தகம் வாட்ச் டவர் தலைவரான ரூதர் போர்டின் குற்றச்சாட்டும் பிரகடனத்தை பற்றி தெளிவாக குறிப்படுகிறது.

மேலும் இதனிமித்தம் பாஸ்டர் ரசலின் வேதமாணவர்களும்

கூட ஹிட்லரின் கொடுமைப்படுத்தும் முகாம்களில் வதைக்கப்பட்டனர் என்பதைக் கவனிக்க வேண்டும்.

# களங்கத்திற்குரிய ஒரு மாறுபாடு !

யெகோவாவின் சாட்சிகள் மாறுபாடான வாழ்க்கை முறை கைது செய்யப்படுவதற்கு ஏதவாக தனிப்பட்டதாக இருந்தது. ரூதர்போர்டுக்கு கி.பி.1933/34ல் ஹிட்லருடன் எற்பட்ட மோதல் தான் இதற்கு காரணம். இதில் துக்கமான செய்தி என்னவெனில் யெகோவாவின் சாட்சிகள் சிறைகளின் கொடுமைப்படுத்தப்பட்டுக் கொண்டிருந்தனர். ரூதர்போர்டோ மிகவும் சொகுசான உல்லாசமான வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தார். அவருக்கு 100 ஏக்கர் பரப்பளவில் மிகப்பெரிய அரண்மனை பெத்சாரிம், சான்டியாகோவில் இருந்தது. அந்த அரண்மனை ராஜ்யத்தில் பழைய ஏற்பாட்டின் பரிசுத்தவான்களுக்கென்றே கட்டப்பட்டதாக இருந்தது. அதில் அவர் மரணம் மட்டும் வாழ்ந்து வந்தார். இவருக்கு அமெரிக்கா மற்றும் பல நாடுகளில் சொகுசான தங்கும் வசதிகள் செய்யப்பட்டிருந்தன.

எப்படிப்பட்ட ஒரு களங்கம்! ரூதர் போர்டின் போதனையை பின்பற்றியதால் யெகோவாவின் சாட்சிகள் சிறையில் தங்கள் வாழ்க்கையையே .இழந்தனர். ஆனால் ரூதர்போர்டு சொகுசாக வாழ்ந்து வந்தார்.

ரூதர்போர்டின் வாட்ச் டவரை விட்டு வெளியேறிய சுவிஷேச ஊழியர் ஸ்நெல், அவருடைய புத்தகத்தை எழுதினார். அவரால் வேதமாணவர்கள் மற்றும் பாஸ்டர் ரசலின் சில உபதேசங்களை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. ஆனால் அவரது புத்தகத்தில் ரூதர்போர்டு மற்றும் அவரது யெகோவாவின் சாட்சிகளுக்கு மாறாக வேதமாணவர்களின் ஆவிக்குரிய கிறிஸ்தவ ஜீவியம் அவரை கவர்ந்ததாக எழுதியிருந்தார்.

உறுதியான தனித்தன்மை வாய்ந்தர்கள் என்று ஸ்நெல்லால்

அழைக்கப்பட்ட வேதமாணவர்கள் உலகெங்கும் பரவிக் கொண்டிருக்கிறார்கள். ஆம், வேதமாணவர்கள் சிறிய கூட்டமாக தன்னிட்சையாக சுதந்திரமாக இயங்கும் ஒரு அமைப்பாகும். பாஸ்டர் ரசல் காலத்தில் இவர்கள் இருந்தது போல சிறிய கூட்டமாக இருந்தாலும் உண்மை சத்தியத்திற்கு தங்களை அர்ப்பணித்தவர்களாகவும் அதன்படி நடக்கிறவர்களாகவும் இருக்கிறார்கள். இவர்கள் தங்களது உண்மை சத்தியத்தால் அளவுக்கு மீறய தாக்கத்தை உலகில் ஏற்படுத்தி வருகிறார்கள்.

☆☆☆

# ★ அத்தியாயம் நான்கு ★

## வேதத்தின் படியான வரலாற்று சிறப்புமிக்க வேதமாணவர்களின் போதனைகளை, யெகோவாவின் சாட்சிகள் நம்புவதில்லை.

*பாஸ்டர் ரசலின் நம்பிக்கைகளை அவரது ஆறு வேதாகம பாடத்தொகுப்புகளில் காணமுடியும். அவர் மரிக்கும்வரை இதுவே வேதமாணவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட போதனைகளாக இருந்தன. ஆனால் ஜட்ஜ் ரூதர்போர்டு வாட்ச் டவரை பொறுப்பெடுத்துக் கொண்ட பிறகு 10 ஆண்டுகளில் பாஸ்டர் ரசலின் ஆறு புத்தக தொகுப்புகளும் ஒதுக்கி வைக்கப்பட்டன. அதற்கு பதிலாக அடிப்படை சத்தியத்திற்கு விரோதமான புதிய புத்தகங்களை ஜட்ஜ் ரூதர்போர்டு எழுதி வெளியிட்டார். உண்மையில் பாஸ்டர் ரசலின் ஆறு தொகுப்புகளும் யெகோவாவின் காட்சிகளின் நூால் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளது. ஆனால் அதை அவர்கள் வாசிப்பதில்லை. ஏனெனில் யெகோவாவின் சாட்சிகள் பாஸ்டர் ரசலின் போதனைகளுக்கு மாறான சத்தியங்களை ஜட்ஜ் ரூதர்போர்டு மூலம் கற்றுக்கொண்டிருந்தனர்.*

*பாஸ்டர் ரசலின் கீழ்க்கண்ட அடிப்படை சத்தியங்களில் வேதமாணவர்கள் இன்றும் நிலைத்திருக்கின்றனர். ஆனால் யெகோவாவின்சாட்சிகள் ஏற்றுக்கொள்வதில்லை.*

# சபையின் தனிச் சுதந்திரம்

அப்போஸ்தலர்கள் காலத்தில் சபையின் மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்கள் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டனர்? அப்போஸ்தலர்14 23ல் மூப்பர்கள் சபை அங்கத்தினர் வாக்குப் பதிவின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் (கிரேக்கம் கைகளை உயர்த்துவதன் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்) என வெளிப்படுத்துகிறது. 2 கொரிந்தியர் 8;19,23ல் ஒவ்வொரு சபைக்கும் பிராணம் பண்ணி ஊழியம் பண்ணுகிற ஊழிக்காரர்கள் மற்றும் பிரசங்கம் பண்ணுகிறவர்களை தலைமை அமைப்பானது தெரிந்தெடுக்காது. அவர்கள் எந்த சபையில் அங்கத்தினரோ அங்குதான் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்று வெளிப்படுத்துகிறது. பாஸ்டர் ரசல் தனது புது சிருஷ்டி என்ற புத்தகத்தில் சபை எவ்வாறு சுயேட்சையாக செயல்படுகிறது என்றும் அதனை எந்த ஒரு தலைமை அமைப்பும் வழி நடத்த தேவையில்லை எனவும் கிறிஸ்துவின் ஆவியே சபையை வழி நடத்தும் எனவும் கூறியிருக்கிறார். இன்றும் இந்த போதனைகளையே வேதமாணவர்கள் கடைபிடிக்கினற்னர். யெகோவாவின் சாட்சிகள் தங்களை வழி நடத்த உயர்அதிகார அமைப்பு தேவை என எதிர்பார்க்கின்றனர். ஆகவே இவர்கள் பாஸ்டர் ரசலின் வேத மணவர்கள் அல்ல.

# அனைவருக்கும் இரட்சிப்பு

பாஸ்டர் ரசலின் முக்கியமான போதனை என்னவெனில், இயேசு கிறிஸ்து உலகின் ஒட்டு மொத்த ஜனத்திற்காகவும் மீட்கும் பொருளாக மரித்தார் என்பதும், ஆகவே மனுக்குலம் அனைத்திற்கும் இரட்சிப்பு பெறும் வாய்ப்பு உண்டு என்பதும் ஆகும். நித்திய தீர்ப்புக்கு முன்னதாக அனைவருக்கும் சத்தியம் போதிக்கப்பட வேண்டும். (1 தீமோத்தேயு 2 3 6) பொதுவான உயிர்த்தெழுதலில் எழுந்து வரும் மனுக்குலம் அனைத்திற்கும் சத்தியம் போதிக்கப்படும். ஆகவே சத்தியத்தை அறிந்து அதன்படி நடக்கிறதை பொறுத்தே நியாயத்தீர்ப்பு

வழங்கப்படும், சத்தியம் அறியாத போது நடந்த நடக்கையின்படி அல்ல. இந்த போதனைகளே வேதமாணவர்களை மற்ற கிறிஸ்தவ சபைகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது. இப்பொழுது யெகோவாவின் சாட்சிகளிடமிருந்தும் பிரித்து காட்டுகிறது. இயேசு கிறிஸ்து மனுக்குலம் முழுமைக்கும் மீட்கும் பொருள் அல்ல என்றும், ஆனால் அனைத்து கிறிஸ்தவ வருப்பினருக்கும் அவர் மீட்கும் பொருள் என்றும், ஆயினும் ஒவ்வொரு மனிதருக்கும் அல்ல என்றும் யெகோவாவின்சாட்சிகள்காலம்காலமாக போரித்து வருகின்றனர்.

# சுவிசேஷத்தின் நோக்கம்

அப்போஸ்தலர் 15 14 17ஐ அடிப்படையாக கொண்டு பாஸ்டர் ரசல், யெகோவா தேவன் ஒரு சிலரை மட்டுமே சிறு மந்தையாக அழைக்கிறார், (லூாக்கா 12 32) இயேசு கிறிஸ்து திரும்பி வந்து ராஜ்யத்தை ஸ்தாபிக்கும் பொழுது மற்ற மனிதரும் கர்த்தரை தேடுவார்கள் என்று போதித்தார். சகோ.ரசலின் இந்த கருத்து அந்த காலத்தில் இரட்சிப்பைப் பற்றிய போதனையில் ஒரு எழுச்சியை ஏற்படுத்தியது. அந்த காலகட்டத்தில் எல்லா சுவிசேஷ ஊழியர்களும் இந்த வாழ்க்கையில் இயேசுவை ஏற்றுக் கொள்ளாதவர்களுக்கு வேதனையுள்ள நரகமே கிடைக்கும் என்று போதித்து வந்தனர். பாவத்தை கட்டுப்படுத்துவதற்கு நரக அக்கினியைப் பற்றிய பயம் அவசியம் என்றும் தேவைப்பட்டால் பயத்தின் மூலம் இரட்சிப்பை கொண்டு வரவேண்டும் என்றும் அவர்கள் நினைத்தனர். அநேக சபைகள் இந்த வாழ்க்கைக்கு பிறகும் கூட இரட்சிப்பின் காரியங்களை விரிவுபடுத்தின.

ஆனால் யெகோவாவின் சாட்சிகள் தங்கள் சகையில் இணைந்திருப்பவர்கள் மட்டுமே அர்மகெதோன் யுத்தத்தில் உயிருடன் பிழைக்க முடியும் என்று விசுவாசிக்கின்றனர்.

2006 மே 15 வாட்ச் டவர் புத்தகம் 22ல் வெளியிடப்பட்ட செய்தி என்னவெனில்.

யெகோவாவின் பூமிக்குரிய இயக்கத்தில் இணைந்து விசுவாசத்தில் இருப்பதைப் பொறுத்தே ஒரு மனிதன் உயிர் பிழைப்பது இருக்கும்.

ஆகவே ஒவ்வொரு யெகோவாவின் சாட்வியும் ஜீவிப்பதற்காக அல்லது மரிப்பதற்காக ஊழியம் செய்ய வேண்டும். இப்படிப்பட்ட குறகிய சிந்தைகொண்ட இவர்கள் பாஸ்டர் ரசலின் வேதமாணவர்களாக ஒருபோதும் இருக்க இயலாது. ஜட்ஜ் ரூதர்போர்டின் குறுகிய மனப்பான்மையை மட்டும் கடைபிடிப்பவர்கள் யெகோவாவின் சாட்சிகள் ஆகும்.

# வேதத்தில் கூறப்படும் யெகோவாவின் சாட்சிகள் யார் ?

யூதர்களை யெகோவாவின் சாட்சிகள் என்று கூறுவதற்கு பதிலாக ரூதர்போர்டு தன்னுடைய வாட்சி டவர் விசுவாசிகளுக்கு யெகோவாவின் சாட்சிகள் (எசா 43. 12) என்று பெயர் சூட்டி இருக்கிறார். ஏனெனில் தேவனுடைய திட்டத்தில் இயேசுவின் மரணத்திலிருந்து யூதர்களுக்கு என எந்த பங்கும் இல்லை என அவர் கூறினார். உண்மையாகவே அவர்களுடைய இடத்தில் இந்த யெகோவாவின் சாட்சிகள் மாற்றப்பெற்றிருக்கின்றனர்.

பாஸ்டர் ரசல் தேவனுடைய தெய்வீக திட்டத்தில் யூதர்கள் மற்றும் அவர்களுடைய தேசம் மனுக்குலத்தை ஆசீர்வதிப்பதில் முக்கிய இடம் பெற்றிருக்கிறது என்று போதித்தார். இஸ்ரயேல் தேசம் முற்றிலும் சிதறடிக்கப்பட்ட போதும் தேவனுடைய வாக்குத்தத்தத்தின்படி அவர்கள் மீண்டும் கூட்டிச் சேர்க்கப்பட்டு தனிதேசமாக ஸ்தாபிக்கப்படுவார்கள் என்றும் அவர் போதித்தார். காலம் அதை உண்மை உன நிரூப்பித்திருக்கிறது. இன்றும் வேதமாணவர்கள் புதிதாக உருவாக்கப்பட்ட இஸ்ரயேல் தேசம் பூமியில் வரப்போகிற தேவனுடைய ராஜ்யத்திற்கு ஒரு முன்னோடியாக இருக்கிறது என்று கூறிய பாஸ்டர் ரசலின் போதனைகளில் வழி நடத்தப்படுகின்றனர். (எரேமியா 32. 37 40) ஆனால் யெகோவாவின் சாட்சிகள் அதை மறுக்கிறார்கள்.

ரசலின் வேத மாணவர்களாக இருக்க முடியாது. இந்த போதனைதான் பாஸ்டர் ரசலை மற்ற சபைகளிலிருந்து வேறுபடுத்திக் காண்பித்தது.

எந்த ஒரு தலைமை அமைப்பன் கீழும் செயல்படாத சுயேட்சையான சபையே பாஸ்டர் ரசலின் வேத மாணவ சபை ஆகும். இதற்கு மாறாக மற்ற சபைகளை கீழ்ப்படுத்தி ஆளுபவர்கள் யாரும் பாஸ்டர் ரசலின் வேத மாணவராக இருக்க முடியாது.

தேவனுடைய திட்டத்தில் யூதர்களின் இட்த்தில் யெகோவாவின் சாட்சிகள் தான் இருக்கிறார்கள் என்று விசுவாசிப்பவர்கள்,பாஸ்டர் ரசலின் வேத மாணவர்கள் அல்ல. தேவன் மாம்சீக இஸ்ரயேலரை மீண்டும் தங்களது சொந்த நாட்டில் கூட்டிச் சேர்த்து வருகிறார் என்பதை வேத மாணவர்கள் உலகெங்கும் போதித்து வருகின்றனர்.

இப்படிப்பட்ட சத்தியங்களே வேதமாணவர்களின் சிறப்பம்சங்களாகும். இதனை மறுதரிப்பவர்கள் பாஸ்டர் ரசலின் ஐக்கியத்தில் இருக்க இயலாது.

☆☆☆

# ★ அத்தியாயம் ஐந்து ★

# ஒரு கலப்பின முயற்சி

இணைய தளத்தில் ஜட்ஜ் ரூதர்போர்டைப் பற்றிய தவறான செய்திகளால் யெகோவாவின் சாட்சிகள் ஜட்ஜ் ரூதர்போர்டை தங்களுடைய வழிகாட்டியாக வெளிக்காட்டுவதை தவிர்த்து பாஸ்டர் நசலை தங்கள் வழிகாட்டியாக காண்பித்துக் கொள்கின்றனர். உண்மையில் இவர்கள் ஒரு கலப்படக்காரர்கள். பாஸ்டர் ரசலின் வேதமாணவர்களாக இருக்க தகுதி அற்றவர்கள், ஏன்?

ஏனெனில் பாஸ்டர் ரசலின் போதனைகளில் நிலைத்திராமல் ரூதர்போர்டின் போதனைகளிலேயே நிலைத்திருக்கின்றனர். இன்றைய வாட்ச் டவர் விசுவாசிகள் முற்றிலும் ரூதர் போர்டின் யெகோவாவின் சாட்சிகள் ஆவர். அவருடைய போதனைகளையே பின்பற்றுகிறார்கள். யூதர்களுடைய இடத்தில் யெகோவாவின் சாட்சிகள் இருக்கிறார்கள் என்பதே ரூதர்போர்டின் முக்கிய போதனையாகும். இன்றும் இந்த போதனையையே வலியுறுத்துகின்றனர்.

இந்த காரியங்கள் மூலம் இவர்கள் பாஸ்டர் சார்லஸ் டி.ரசலின் போதனைகளில் இல்லை என்றும் இவர் அவர்களுடைய வழிகாட்டியாக இருக்க முடியாது என்றும் அறிய முடிகிறது. இன்றும் பாஸ்டர் ரசலின் போதனைகளில் நிலைத்திருக்கும் வேதமாணவர்களையே இவர் உருவாக்கினார். முதலில் இருந்தது போல வேதமாணவர்கள் மட்டுமே எந்தவித தலைமையின் கீழும் இயங்காதவர்களாகும். வேதமாணவர்கள் சுயேட்சையாக செயல்படும் அமைப்பாக இருந்தாலும் சபைகளுக்கிடையேயான காரியங்களிலும் கன்வென்ஷன்களிலும் ஒருங்கிணைந்து செயல்படுவார்கள். அநேக வேத மாணவ சபைகள் தேசிய மற்றும்

உலகளவில் நடக்கும் வேதாகம ஊழியங்களை தாங்குபவர்களாக இருக்கிறார்கள். இன்னும் அநேக ஊழியங்களை செய்து வருகிறார்கள். சில சபைகள் ஊழியத்திற்கு பண உதவி செய்வதிலும் சில சபைகள் இணைய தளம் மூலம் ஊழியம் செய்வதிலும், சில சபைகள் பாஸ்டர் ரசலின் ஆறு வால்யூம்களை உலக அளவில் பல்வேறு மொழிகளில் மொழியாக்கம் செய்து வெளியிடுவதிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

பாஸ்டர் ரசலின் வேதமாணவர்களின் சுவிசேஷ ஊழியர்கள் கர்த்தருக்கு பயப்படும் பயத்துடன் செயல்படுகின்றனர். ராபர்ட் ஊ கில் கூாக்ஷ என்பவர் கூறுவதைக் கவனியுங்கள்.

அவர்கள் வளர்ந்து வருகின்றனர். அவர்களுடைய பதிப்பகங்களும் நன்கு செயல்பட்டு வருகின்றன. அவர்களுடைய சத்தியத்தில் குறைபாடுகளை தெரியப்படுத்த கேபிள் கூஏ மற்றும் இணையதளத்தின் மூலம் தொடர்பு கொள்கின்றனர். எல்லாவற்றிற்கும் மேலாக, கிறிஸ்துவின் இரண்டாம் வருகை கிபி 1874ல் ஆரம்பித்து விட்டது என்று வலியுறுத்தி வருகின்றனர். அவர்கள் யெகோவாவின் சாட்சிகள்? இல்லை. வேதமாணவர்கள் சார்லஸ் டேஸ் ரசல் என்பவரால் முறையான சத்தியத்தில் வழி நடத்தப்படும் தனித்துவமான சுதந்திரமான அமைப்பு ஆகும். மேலும் இன்றைய வாட்ச்டவர் சொஸைட்டியுடனும் யெகோவாவின் சாட்சிகளுடனும் எந்தவித தொடர்பும் அற்றவர்களாகவும் இருக்கிறார்கள்.

வேதமாணவர்கள் அமெரிக்காவில் மட்டுமல்ல, எல்லா தேசத்திலும் காணப்படுகிறார்கள். உண்மை கிறிஸ்தவர்கள் எல்லாரும் இந்த அமைப்பில் இணைய வரவேற்கப்படுகின்றனர். எந்த விதிமுறைகளும் கிடையாது கூகுல் (ழூடிடிபடந) என்ற இணையதளம் மூலம் அருகாமையில் இருக்கும் வேதமாணவ சபைகளை எளிதில் காணமுடியும். உங்கள் பகுதியில் அருகாமையில் உள்ள சபையை கண்டுபிடியுங்கள்.

# இறுதி குறிப்பு

## அத்தியாயம் – 1

### யெகோவாவின் சாட்சிகள், பாஸ்டர் ரசலின் வேத மாணவர்கள் அல்ல

1. ஹெர்சல் இயர்புக் 190
2. வில்லியம் ஸ்நெல், 30 வருட வாட்ச் டவர் அடிமை (கிராண்ட் ரேபிட்ஸ் ; பேக்கர் புக் உறவுஸ்) 40, 41
3. Ibid., 41.
4. Ibid., 42
5. Ibid., 43
6. யெகோவாவின் சாட்சிகள் ; புரோசிளமர்கள் ஆப் காட்ஸ் கிங்டம் (புருக்லின் ; வாட்ச் டவர் பைபிள் மற்றும் டிராக்ட் சொஸைட்டி, 1933) 155, 156

## அத்தியாயம் 2

### மாற்று உபதேசங்களும், யூத விரோத கொள்கையும்

7. யெகோவாவின் சாட்சிகளின் 1934 இயர்புக் (புருக்ஸின் வாட்ச் டவர் பைபிள் மற்றும் டிராக்ட் சொஸைட்டி 1933 ) 130, 131

8. தேவனுடைய திட்டத்தில் யெகோவாவின் சாட்சிகள் (புருக்லின் வாட்ச் டவர் மற்றும் டிராக்ட் சொஸைட்டி 1959) 130

9. 1934 வருட யெகோவாவின் சாட்சிகள் புத்தகம் 134 )

10. Ibid., 135

For More E books and Tracks
Please Contact the email - victorgnanaraj01@gmail.com
Coimbatore Bible Students